# Chapter – 17

# விலங்குலகம்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**Question 1.**
பின்வரும் தொகுதிகளில் கடல் வாழ் உயிரினங்களை மட்டும் கண்டறிக

அ) மெல்லுடலிகள்
ஆ) துளையுடலிகள்
இ) குழியுடலிகள்
ஈ) முட்தோலிகள்

**விடை:**
ஈ) முட்தோலிகள்

**Question 2.**
மீசோகிளியா காணப்படுவது

அ) துளையுடலிகள்
ஆ) குழியுடலிகள்
இ) வளைதசையுடலிகள்
ஈ) கணுக்காலிகள்

**விடை:**
ஆ) குழியுடலிகள்

**Question 3.**
பின்வரும் ஜோடிகளில் எது குளிர் இரத்தப்பிராணி அல்ல?

அ) மீன்கள் மற்றும்
இ) ரு வாழ்விகள்
ஆ) இருவாழ்விகள் மற்றும் பறவைகள்

இ) பறவைகள் மற்றும் பாலூட்டிகள்
ஈ) ஊர்வன மற்றும் பாலூட்டிகள்

**விடை:**
இ) பறவைகள் மற்றும் பாலூட்டிகள்

**Question 4.**
நான்கு அறைகளையுடைய இதயம் கொண்ட லிலங்கினை கண்டறிக.

அ) பல்லி
ஆ) பாம்பு
இ) முதலை
ஈ) ஓணான்

**விடை:**
இ) முதலை

**Question 5.**
மண்டையோடற்ற உயிரி எது?

அ) ஏகாரினியா
ஆ) ஏசெபாலியா
இ) ஏப்டீரியா
ஈ) ஏசீலோமேட்டா

**விடை:**
அ) ஏகாரினியா

**Question 6.**
இரு பாலின (Hermaphrodite) உயிரிகள் எவை?

அ) ஹைடிரா, நாடாப்புழு, மண்புழு, ஆம்பியாக்சஸ்
ஆ) ஹைடிரா, நாடாப்புழு, மண்புழு, அசிடியன்
இ) ஹைடிரா, நாடாப்புழு, மண்புழு, பலனோகிளாசஸ்
ஈ) ஹைடிரா, நாடாப்புழு, அஸ்காரிஸ், மண்புழு

**விடை:**
ஆ) ஹைடிரா, நாடாப்புழு, மண்புழு, அசிடியன்

**Question 7.**
குளிர் இரத்தப் பிராணிகள் எவை?

அ) மீன், தவளை, பல்லி, மனிதன்
ஆ) மீன், தவளை, பல்லி,மாடு
இ) மீன், தவளை, பல்லி, பாம்பு
ஈ) மீன், தவளை, பல்லி, காகம்

**விடை:**
இ) மீன் , தவளை, பல்லி, பாம்பு

**Question 8.**
காற்றுறைகள் மற்றும் காற்றெலும்புகள் காணப்படுவது எதில்?

அ) மீன்
ஆ) தவளை
இ) பறவை
ஈ) வௌவால்

**விடை:**
இ) பறவை

**Question 9.**
நாடாப்புழுவின் கழிவு நீக்க உறுப்பு எது?

அ) சுடர் செல்கள்
ஆ) நெஃப்ரீடியா
இ) உடற்பரப்பு
ஈ) சொலினோசைட்டுகள்

**விடை:**
அ) சுடர் செல்கள்

**Question 10.**
குழல் போன்ற உணவுக்குழலைக் கொண்டது?

அ) ஹைடிரா
ஆ) மண்புழு
இ) நட்சத்திர மீன்
ஈ) அஸ்காரிஸ் (உருளைப்புழு )

**விடை:**
ஈ) அஸ்காரிஸ் (உருளைப் புழு)

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

**Question 1.**
துளையுடலிகளின் கழிவுநீக்க துளை ......................................

**விடை:**
ஆஸ்டியா

**Question 2.**
டினிடியா என்ற சுவாச உறுப்புகள் ...................................... ல் காணப்படும்.

**விடை:**
மெல்லுடலிகள்

**Question 3.**
ஸ்கேட்ஸ் என்பது ...................................... மீன்களாகும்

**விடை:**
குருத்தெலும்பு

**Question 4.**
...................................... இரு வாழ்விகளின் லார்வா ஆகும்.

**விடை:**
தலைபிரட்டை

**Question 5.**
…………………………… என்பது தாடையற்ற முதுகெலும்பிகள் ஆகும்.

**விடை:**
வட்டவாயுடையவை) லாம்பிரே

**Question 6.**
…………………………… ஆனது பாலூட்டிகளின் சிறப்புப் பண்பாகும்.

**விடை:**
தாய் சேய் இணைப்பு சிசு

**Question 7.**
முட்கள் கொண்ட எறும்பு உண்ணியானது …………………………… பாலூட்டிக்கு உதாரணமாகும்

**விடை:**
முட்டையிடும்

## III. சரியா? தவறா? தவறெனில் திருத்துக.

**Question 1.**
கால்வாய் மண்டலம் குழியுடலிகளில் காணப்படுகிறது.
கால்வாய் மண்டலம் முட்தோலிகளில் காணப்படுகிறது.

**விடை:**
தவறு

**Question 2.**
இருபால் உயிரிகள் ஆண் மற்றும் பெண் இனப்பெருக்க உறுப்புகளைப் பெற்றுள்ளன.

**விடை:**
சரி

**Question 3.**
வளைதசையுடலிகளின் சுவாச உறுப்பு டிரக்கியா ஆகும் வளைதசையுடலிகளின் சுவாச உறுப்பு உடற்சுவராகும்.

**விடை:**
தவறு

**Question 4.**
மெல்லுடலிகளின் லார்வா பின்னேரியா ஆகும் மெல்லுடலிகளின் லார்வா ட்ரோக்கோபோர் ஆகும்.

**விடை:**
தவறு

**Question 5.**
பலனோகிளாசஸ் குறுயிழை இயக்க உணவூட்ட முறையை பெற்றுள்ளன.

**விடை:**
சரி

**Question 6.**
மீன்களின் இதயம் இரண்டு அறைகளை உடையது.

**விடை:**
சரி

**Question 7.**
மென்மையான மற்றும் ஈரப்பதமான தோலினை ஊர்வன கொண்டுள்ளன. மென்மையான மற்றும் ஈரப்பதமான தோலினை இரு வாழ்விகள் கொண்டுள்ளன.

**விடை:**
தவறு

**Question 8.**
முன்னங்கால்களின் மாறுபாடுகளே பறவைகளின் இறக்கைகளாகும்.

**விடை:**
சரி

**Question 9.**
பாலூட்டிகளில் பால் சுரப்பிகள் பெண் இனங்களில் காணப்படுகின்றன.

**விடை:**
சரி

## IV. பொருத்துக.

| தொகுதி | | உதாரணம் | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| அ | குழியுடலிகள் | i | நத்தை | iv | ஹைட்ரா |
| ஆ | தட்டைப்புழுக்கள் | ii | நட்சத்திரமீன் | iii | நாடாப்புழு |
| இ | முட்தோலிகள் | iii | நாடாப்புழு | ii | நட்சத்திர மீன் |
| ஈ | மெல்லுடலிகள் | iv | ஹைட்ரா | i | நத்தை |

## V. மிகச் சுருக்கமாக விடையளி

**Question 1.**
வகைப்பாட்டியல் வரையறு.

**விடை:**
அடிப்படைக்கொள்கைகள் முறைகள் மற்றும் விதிகளை உள்ளடக்கிய பிரிவு ஆகும்.

**Question 2.**
கொட்டும் செல்கள் என்றால் என்ன?

**விடை:**
குழியுடலிகளில் புறப்படையில் காணப்படும் பாதுகாப்புச் செல்கள் கொட்டும் செல்கள் அல்லது நிமெட்டோசிஸ்ட்கள் எனப்படும்.

**Question 3.**
குழியுடலிகள் ஈரடுக்கு உயிரிகள் என்றழைக்கப்படுவது ஏன்?

**விடை:**
உடற்சுவரில் புற அடுக்கு மற்றும் அக அடுக்கு என இரு அடுக்குகள் உண்டு. எனவே இது ஈரடுக்கு உயிரிகள் என அழைக்கப்படுகின்றன.

**Question 4.**
இரு வாழ் உயிரிகளின் (இரு வாழ்விகள்) சுவாச உறுப்புகளைப் பட்டியலிடுக.

**விடை:**

- செவுள்கள்,
- நுரையீரல்,
- தொண்டை
- தோல்

**Question 5.**
நட்சத்திர மீனில் எவ்வாறு இடப்பெயர்ச்சி நடைபெறுகிறது?

**விடை:**
நட்சத்திர மீன்கள் குழல் கால்கள் உதவியால் கிடைமட்ட மற்றும் செங்குத்தான முறைகளில் இடப்பெயர்ச்சி செய்கிறது.

**Question 6.**
ஜெல்லிமீன் மற்றும் நட்சத்திர மீன் ஆகியவை மீனை ஒத்துள்ளனவா? காரணம் கூறு.

**விடை:**
**இல்லை**

- ஜெல்லி மீன் குழியுடலிகள்
- நட்சத்திர மீன் முட்தோலிகள்
- இவை இரண்டும் முதுகெலும்பு அற்ற உயிரிகள்

**Question 7.**
தவளைகள் இருவாழ்விகள் என்று அழைக்கப்படுவது ஏன்?

**விடை:**
இவை நீர் மற்றும் நிலச் சூழ்நிலையில் வாழ்வதற்கான தகவமைப்பினைப் பெற்றுள்ளது.

## VI. சுருக்கமாக விடையளி

**Question 1.**
தொகுதி அன்னலிடா பற்றி குறிப்பு வரைக.

**விடை:**

- உண்மையான உடற்குழி உண்டு
- சீட்டாக்கள் எனும் நுண்ணிய நீட்சிகள் மூலம் இடப்பெயர்ச்சி செய்கின்றன.
- உடலானது கியூட்டிக்கிள் எனும் ஈரப்பசை மிக்க உறையினால் ஆனது.
- கழிவு நீக்கம் நெஃப்ரிடியாவால் நடக்கிறது.

- மூளையாகக்கொண்ட நரம்பு மண்டலம் காணப்படுகின்றது.
- டீராக்கோபோர் லார்வா இவற்றின் பொதுலார்வா ஆகும். (எ.கா)மண்புழு , அட்டை


**Question 2.**
தட்டைப்புழுக்கள் மற்றும் உருளைப் புழுக்கள் இடையேயான வேறுபாட்டினைக் கூறுக.

**விடை:**

| | தட்டைப்புழுவினம் | உருளைப்புழுவினம் |
|---|---|---|
| 1. | தொகுதி : பிளாட்டி ஹெல் மிண்தஸ் | தொகுதி - நிமட்டோடா |
| 2. | உணவுப்பாதை இல்லை அல்லது எளிமையானது | உணவுக்குழல் நீண்ட குழாய் அமைப்புடையது |
| 3. | உடல் கண்டங்களைக் கொண்டது | கண்டங்களற்றது |
| 4. | கழிவுநீக்கம் சுடர்செல்கள் மூலம் நடைபெறுகின்றன. | கழிவுநீக்கம் கழிவு நீக்க கால்வாய் மூலம் நடைபெறுகிறது. |
| 5. | ஒட்டுண்ணிகள் | ஒட்டுண்ணி மற்றும் தனித்து வாழ்பவை |

**Question 3.**
தொகுதி முதுகு நாணிகளின் (கார்டேட்டா) வழிமுறைப்படத்தினை தருக.

**விடை:**




**Question 4.**
மீன்களின் சிறப்புப் பண்புகள் ஏதேனும் ஐந்தினைப் பட்டியலிடுக.

**விடை:**

- மீன்கள் நீரில் வாழ்பவை மற்றும் குளிர்ரத்தப்பிராணிகள்
- உடல் படகு போன்று அமைந்துள்ளது
- இணைத்துடுப்புகளாலும் நடுமையத் துடுப்புகளாலும் நீந்துகின்றன.
- உடல் செதில்களால் மூடப்பட்டுள்ளன.
- தலை, உடல், வால் என மூன்று பகுதிகளைக் கொண்டது.

**Question 5.**
இருவாழ்விகளின் நீர் மற்றும் நில வாழ் பண்புகள் குறித்து விளக்குக.

**விடை:**
**நீர் வாழ் பண்புகள்:**

- தோல் ஈரப்பதமான சுரப்பிகளைப் பெற்றுள்ளது.
- பின்னங்காலில் விரலிடைச்சவ்வு உள்ளது.
- சுவாசம் செவுள் மூலம் நடைபெறுகிறது.

**நிலவாழ் பண்புகள்:**

- இரண்டு ஜோடி கால்களைப் பெற்றுள்ளது.
- நுரையீரல் மூலம் சுவாசம் நடைபெறுகிறது.

**Question 6.**
பறவையின் கால்கள் பறத்தலுக்குத் தக்கவாறு எவ்வாறு தகவமைந்துள்ளன?

**விடை:**

- பறவைகளில் ஈரினைக்கால்கள் உண்டு. இதில் முன்னங்கால்கள் பறப்பதற்கு ஏற்றவாறு இறக்கைகளாக மாறுபாடடைந்துள்ளன.
- பின்னங்கால்கள் நடப்பதற்கும் ஓடுவதற்கும் உதவுகின்றன.

## VII. விரிவாக விடையளி

**Question 1.**
முன்முதுகு நாணிகளின் பண்புகளை விவரிக்க.

**விடை:**


1. முன் முதுகு நாணிகள் முதுகெலும்பிகளின் முன்னோடிகள்.
2. இவற்றிற்கு மண்டையோடு இல்லாததால் எகிரேனியா என்றழைக்கப்படுகின்றன.
3. முகுகு நாண் அமைப்பின் அடிப்படையில் இவை மூன்று துணைத் தொகுதியாக பிரிக்கப்பட்டுள்ளன.
    - அரை முதுகு நாணிகள்
    - தலை முதுகு நாணிகள்
    - வால் முதுகு நாணிகள்

### I. அரைமுதுகு நாணிகள்




- கடல் வாழ் உயிரிகள்
- இவை புழுவடிவமுடையது
- உடல் மென்மையானது (உடற்கண்டமற்றவை) இருபக்க சமச்சீர் உடையவை.
- இவைகள் மூவடுக்கு உயிரிகள்
- முதுகு நாணானது தொண்டைப் பகுதிகள் மேல்புறத்திலிருந்து முன்னோக்கிய சிறிய நீட்சியாக உள்ளது. எ.கா – பலனோகிளாஸஸ்

### II. தலை முதுகு நாணிகள்



- இவை மீன்வடிவ கடல்வாழ் முதுகு நாணிகள்
- இவற்றில் முதுகுப்புறத்தில் இணையற்ற துடுப்பு உள்ளது.
- முதுகு நாண் தலை முதல் நுனி வரை நீண்ட நிலையான அமைப்பாகும் எ.கா – ஆம்பியாகஸிஸ்

**III. வால் முதுகு நாணிகள்**



- முதுகு நாண் லார்வா நிலையில் வால் பகுதியில் மட்டும் காணப்படுகிறது.
- முதிர் உயிரிகள் இயல்பான அமைப்பை இழந்து தரையில் ஒட்டி வாழ்பவை.
- ஊடலைச் சுற்றி டியுனிக் எனும் உரை உண்டு எ.கா — அசிடியன்

**Question 2.**
தொகுதி – கணுக்காலிகளைப் பற்றி எழுதுக

**விடை:**

- அதிக சிற்றினங்களைக் கொண்ட மிகப்பெரிய தொகுதி.
- ஆர்த்ரோபோடு என்பதன் பொருள் இணைப்புக்கால்கள் என்பதாகும்.
- இதன் உடல், தலை, மார்பு, வயிறு எனப் பிரிக்கப்பட்டுள்ளது.
- உடலின் மேற்புறத்தில் கைட்டின் பாதுகாப்பு உறையாக உள்ளது.
- உடற்குழி ஹீமோலிம்ப் என்ற திரவத்தினால் நிரப்பப்பட்டுள்ளது.

- நன்கு வரையறுக்கப்பட்ட இரத்தக்குழல்கள் இல்லை.

- தோலுரித்தல் மூலம் புறச் சட்டகத்தை களைகிறது.

- சுவாசம் டிரக்கியா மற்றும் புத்தக நுரையீரல் மூலம் நடைபெறுகிறது.

- பூச்சிகளில் மால்பிஜியன் குழல்கள் மூலமும் இறால்களில் பச்சைச் சுரப்பிகள் மூலம் கழிவு நீக்கம் நடைபெறுகிறது. எ.கா- எட்டுக்கால்பூச்சி, நண்டு, வண்ணத்துப்பூச்சி, தேள்.